சேர்த்துக்கொள்ளப்படாமலிருந்தால், கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

Hindi Pandits

* 262 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received from the erstwhile Hindi Pandits Association of Tamil Nadu in August, 1972 praying that fully qualified Hindi Pandits may be given facilities for Secondary Grade training; and

(*b*) if so, the action taken thereon?

இந்தி ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தி ஆசிரியராக முழுத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு இடைநிலைத் தர ஆசிரியப் பயிற்சி பெற வசதிகள் செய்து தருமாறு 1972 ஆகஸ்டு திங்களில் தமிழ்நாடு முன்னாள் இந்தி ஆசிரியர் சங்கத்திடமிருந்து முறையீடு எதுவும் அரசால் பெறப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, நம் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய இந்தி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் 1968-க்குப் பின்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, அவர்களையும் இந்த மாதிரி செகண்டரி கிரேட் குறுகிய காலப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார்கள். அதனுடைய பிரதிகள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டன. கல்வி இலாகாவிற்கும் இதுபற்றி அனுப்பப்பட்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றிருப்பார்களானால், இத்தகைய வாய்ப்பைப் பெறுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாமல், இந்தி மொழியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்தி ஆசிரியர் கிரேடு ஒன்று, இரண்டு என்று இருக்கக்

கூடும். அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்களானால், இந்த வாய்ப்பு வசதி செய்து தரப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, சுமார் 110 பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றும் கூட அவர்களை அலுவலர்களாக, ஆபீஸ் கிளார்க்குகளாக நியமித்திருக்கிறோம். அவர்கள் மொழிப் பயிற்சி பெற்றவர்கள். மொழி போதனையில் பயிற்சி பெற்றவர்கள். இப்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்களை ஆசிரியர்கள் நிலைக்கு உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் அவர்களுக்கு விதித்த விதியின்படி

"Such Pandits are required to appear for the S.S.L.C. Examination within five years with a view to get themselves qualified for the posts in which they have been absorbed. There is no provision in the G.O. for the in-service training of such Pandits as have been absorbed in the non-teaching posts and subsequently passed S.S.L.C. In the case of these Pandits, the question of qualifying themselves to become Secondary Grade teachers does not arise."

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குப் பிறகு அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாத காரணத்தால், அலுவலர்கள் போன்ற வேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தங்களைத் தேர்வு பெற்றவர்களாக ஆக்கிக் கொண்டிருப்பார்களானால், இந்தி மொழி பயின்று, எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்கிறவர்களை செகண்டரி கிரேடில் எடுத்துக்கொள்வதைப்பற்றி வழி வகைகளை ஆராயலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் பதில் முரண்பட்டுச் சொல்கிறமாதிரி தெரிகிறது. முதலில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாக இருந்தால், வாய்ப்புகள் அளிக்கப்படும் என்றார்கள். இதிலிருந்து படிக்கிறபோது, முன்பு ஆசிரியர்களாக இருந்தவர்கள் தற்போது எழுத்தர்கள், அட்டென்டர்களாக இருக்கிற காரணத்தினால், இந்தப் பயிற்சி கொடுக்கப்பட இயலாது என்பதுபோல ஜி.ஓ. இருக்கிறது. இதை ஒட்டி 1968-ல் 13 பேர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். இன்னும் 110 பேருக்கு, முன்பே எஸ்.எஸ்.எல்.சி. படித்த பண்டிதர்களுக்கு, அந்தப் பயிற்சி கிரேடு அளிக்கப்படவில்லை. அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக ஆக்குவதைப்பற்றி அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த உத்தரவு போட்ட நேரத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருந்தால், அவர்களை எடுத்துக்கொண்டு, செகண்டரி கிரேடு இன் சர்வீஸ் டிரெயினிங்குக்கு அனுப்பி ஆசிரியர்கள் ஆக்கினோம். குறைந்த படிப்பு உடையவர்களாக இருந்தால், அப்படிப்பட்டவர்களை அலுவலர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம். அதற்குப் பிறகு, அப்படிப்பட்டவர்கள் தாங்கள் மறுபடியும் ஆசிரியர் தொழிலுக்கு வரவேண்டுமென்று விரும்பினால், அப்படிப்பட்டவர்களுக்கு செகண்டரி கிரேடு டிரெயினிங் கொடுப்பதைப்பற்றி ஆராயலாம் என்று குறிப்பிட்டேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த இந்தி படித்தவர்கள் முன்னாலேயே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள். சர்வீசுக்குப் போகாமல் இந்தி பண்டிதர்களாக இருந்தவர்கள் இப்போது செகண்டரி கிரேடுக்குப் போகக் கூடும். அமைச்சரவர்கள் கூறியபடி, அம்மாதிரி உள்ளவர்களுக்கு வசதியை அரசு விரைவிலே கொடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திருப்பார்களானால், அவர்களை வேலையில் அமர்த்திக்கொண்டே, அவர்களுக்கு இன் சர்வீஸ் டிரெயினிங் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தேர்ச்சி பெறாதவர்களைத்தான் நாம் அலுவலர்களாக ஏற்றுக்கொண்டிருந்தோம். அலுவலர்களாகச் சேர்ந்ததற்குப் பிறகு தேர்ச்சிக்குரியவர்களாக, வெற்றி பெற்றிருப்பார்களானால், அப்படிப்பட்டவர்களை ஈர்த்துக்கொள்ள வழி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து, அதற்கான முறைகளில் பரிசிலனை செய்து தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வந்து செகண்டரி கிரேடு இன் சர்வீஸ் டிரெயினிங் பெறவேண்டுமென்று விரும்பினால் அதற்கு வழி செய்யலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் யார் பாஸ் செய்திருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் இன் சர்வீஸ் டிரெயினிங் கொடுத்தாகிவிட்டது. அதற்குப் பின்னால் பாஸ் செய்திருந்தாலும், அந்த ஸ்கிமை ரத்து செய்து விட்டோம் என்றார்கள். ஆக, 110 பேர்கள் ஆசிரியர்களாக ஆக வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதால் அவர்களுக்கு 'இன் சர்வீஸ் டிரெயினிங்' கொடுத்து, அவர்களுக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்து, ஆசிரியர் அல்லாத சிப்பந்திகளாக இருக்கும் அவர்களை ஆசிரியர் சிப்பந்திகளாக ஆக்குவதற்கு மறு பரிசிலனை செய்ய உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான் குறிப்பிட்டேன்.